# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2146/39 - 2019 ඔක්තෝබර් මස 27 වැනි ඉරිදා - 2019.10.27

*2146/39 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் ஆணைக்குழுவினால் 2141/87 ஆம் இலக்க 2019.09.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அச்சு மற்றும் இலத்திரனியில் ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஊடக வழிகாட்டுநெறிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் மேலதிகமாக வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டுநெறிகள்.**

01. அரசியல் உரிமையற்ற அரச அலுவலர்களின் மற்றும் முனைப்பான சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் அலுவலர்கள் போன்றே இளைப்பாறிய பாதுகாப்புப் படை அலுவலர்கள் அல்லது பொலிஸ் அலுவலர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது சீருடை அணிந்தவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள் அல்லது கூற்றுக்கள், கட்சி அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் அல்லது பாதிப்புக்குட்படுத்துகின்ற விதத்தில் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறு ஊடகங்களில் அல்லது பிரசார ஊடகமொன்றினூடாக வெளிப்படுத்தல், ஒலி/ஒளிபரப்புதல் அல்லது பகிரப்படுத்தல் கூடாது.

02. வாக்கெடுப்பு நிலையங்களில் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையங்களில் புகைப்படமெடுத்தல் அல்லது காணொளிப்படமெடுத்தல் (வீடியோ எடுத்தல்) என்பவற்றை தேர்தல் ஆணைக்குழுவின் உரிய எழுத்துமூல அனுமதியின்றி மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு விதத்தில் வாக்கெடுப்பு நிலையங்களினுள் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையங்களினுள் உரிய அனுமதியின்றி பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள் அல்லது காணொளிக் காட்சிகளை அச்சு, இலத்திரனியில் அல்லது சமூக ஊடகங்களூடாக பகிரங்கப்படுத்தல் கூடாது.

03. தேர்தலொன்றின் தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக வெளியிடும் வரை தேர்தலின் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என்.ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, ஒற்றோபர் 27.

11-1032


1A - PG 4723 — 267 (2019/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*